பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 09 2026** **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

1. வாகனங்கள் விற்பனை கடந்த மாதம் சாதனை அளவை எட்டியதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான ஊதிய உச்சவரம்பு உயர்த்தப்பட்டதன் மூலம் 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. திரைப்படத்துறையின் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருது கன்னட நடிகர் அனந்த்நாகிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

4. சூடானில் தங்கச் சுரங்கத்தில் நேரிட்ட விபத்தில் 67 பேர் உயிரிழந்தனர்.

5. ஸ்குவாஷ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் அனாகத் சிங் 17-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>

வாகனங்கள் விற்பனை கடந்த மாதம் சாதனை அளவை எட்டியதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக ஊடகத்தில் வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

கடந்த மாதம் பயணியர் வாகனங்கள் விற்பனை 4 லட்சத்து 39 ஆயிரமாக அதிகரித்தது என்றும், இருசக்கர வாகனங்களின் விற்பனை 20 லட்சமாக அதிகரித்தது என்றும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான ஊதிய உச்சவரம்பை மத்திய அமைச்சரவை உயர்த்தியுள்ளது தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதற்கான உச்சவரம்பை 15 ஆயிரத்திலிருந்து, 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்த மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு நாளை முதல் செயல்பாட்டிற்கு வரும் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

இதன்படி, 20-க்கும் மேற்பட்ட ஊழியர்களை கொண்ட நிறுவனங்களுக்கு இது பொருந்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

25 ஆயிரம் வரை ஊதியம் பெறுபவர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பங்கு 12 சதவீதமாகவும், தொழிலாளர்களின் பங்கு 12 சதவீதமாகவும், மத்திய அரசின் பங்கு ஒன்று புள்ளி ஒன்று ஆறு சதவீதமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இதன்மூலம், அவர்களின் சமூக பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, 50 லட்சம் முதல், ஒரு கோடி வரையிலான புதிய தொழிலாளர்கள், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியத்தில் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<<>>>>>

திரைப்படத்துறையின் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருது கன்னட நடிகர் அனந்த்நாகிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்தின் ஏக்தா நகரில் வரும் 22-ஆம் தேதி நடைபெறவுள்ள தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இவ்விருதினை அவருக்கு வழங்க உள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கன்னட திரைத்துறையில் முத்திரை பதித்த அனந்த்நாகிற்கு இந்த விருது வழங்கப்படுவதாகவும், இதற்காக அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஊரகப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் துப்புரவுப்பணிகளை டிஜிட்டல் முறையில் கண்காணிப்பதற்கான வசதியை மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் அறிமுகம் செய்துள்ளார்.

இதுதொடர்பாக, மாநில அரசுகளோடு காணொலி வாயிலாக நடத்திய ஆய்வுக்கூட்டத்தின்போது அவர் இதனை அறிமுகப்படுத்தியதாக நீர்வளத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஊரகப்பகுதிகளில் துப்புரவுப்பணிகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பூட்டான் உடனான நல்லுறவு மேலும் வலுப்படுத்தப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக பூட்டான் சென்றுள்ள அவர், இன்று திம்புவில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Lyonpo**

**Dhungyel** -வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

எரிசக்தி, வர்த்தகம், கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சுக்களின்போது விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

பிரதமரின் விஷ்வகர்மா திட்டத்தின்கீழ், **30** லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு நாளையுடன் மூன்றாண்டுகள் நிறைவடைவதையொட்டி சிறு-குறு தொழில்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைவினைக்கலைஞர்களுக்கு உரிய வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>

பிரதமருக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களின் ஏலம் நாளை தொடங்கி, அடுத்த மாதம் **31**-ஆம் தேதிவரை நடைபெறும் என்று மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்னணு முறையில் இந்த ஏலம் நடைபெறும் என்று கூறினார்.

ஆயிரத்து **498** பரிசுப்பொருட்கள் இந்த ஏலத்தில் இடம்பெறும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பீகாரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

வைஷாலி மாவட்டத்துக்கு உட்பட்ட **Tirasi, Saraipur** கிராமங்களில் அவர் இந்த ஆய்வினை மேற்கொண்டதோடு, பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினார்.

மீட்புப்பணிகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பீகார் மாநிலத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் சட்டத்தின் ஆட்சி உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

கோரக்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் அறிவுறுத்தலின்பேரில் உத்தரப்பிரதேசத்தில் சட்டம் — ஒழுங்கு சீராக பராமரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

சமூக விரோதிகளின் அச்சுறுத்தலுக்கு உத்தரப்பிரதேசத்தில் தற்போது இடமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தமது அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திரு யோகி ஆதித்யநாத் கூறினார்.

<<<<<<>>>>>

மேற்குவங்கத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான முதல்கட்ட களப்பணி 100 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு சுவேந்து அதிகாரி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இப்பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றிய ஊழியர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு முன்னதாகவே இப்பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் திரு சுவேந்து அதிகாரி கூறினார்.

<<<<<<>>>>>

திருமலை திருப்பதி கோவிலில் தரிசனம் மேற்கொள்ளும் பக்தர்களுக்கு 2 லட்சம் ரூபாய் காப்பீடு வசதி வழங்கப்படும் என்று ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

இன்று திருப்பதியில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து இந்த வசதி வழங்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி, கோவில் தரிசனத்திற்காக வரும் பக்தர்கள் உயிரிழக்கும் பட்சத்தில் 2 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆதார் அடிப்படையில் ஆன்லைன் வாயிலாக இந்த காப்பீட்டு வசதி பக்தர்களுக்கு வழங்கப்படும் என்றும் திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கேரளத்தில் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவதற்கான விரிவான அறிக்கை தயார் செய்யப்பட உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு V D சதீசன் கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயலாக்கமே அரசின் வெற்றியாக கருதப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக கேரளத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு V D சதீசன் கூறினார்.

<<<<<<>>>>>

சிங்கப்பூர் தொழில் நிறுவனங்கள் தெலங்கானாவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று ஹைதராபாதில் தம்மை சந்தித்த சிங்கப்பூர் குழுவினரிடம் முதலமைச்சர் இக்கோரிக்கையை வலியுறுத்தியதாக தெலங்கானா அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த சந்திப்பின்போது செமி கண்டெக்டர் உற்பத்திப்பிரிவை தெலங்கானாவில் தொடங்க சிங்கப்பூர் குழுவினர் விருப்பம் தெரிவித்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

சூடானில் தங்கச் சுரங்கத்தில் நேரிட்ட விபத்தில் 67 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு **Kordofan** மாகாணத்துக்கு உட்பட்ட **Al Zaraa** தங்கச்சுரங்கத்தில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

அப்பகுதியில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இடிபாடுகளுக்கு இடையே பலர் சிக்கி உள்ளதாகவும் அந்நாட்டு பாதுகாப்புப்படையினர் தெரிவித்தனர்.

இதன் காரணமாக உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுவதாகவும் அவர்கள் கூறினர்.

<<<<<<>>>>>

பாகிஸ்தானின் கடற்படைக்கு சொந்தமான படகு, இந்திய கடற்படை கப்பல் மீது மோதியதற்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரியை சம்மன் செய்து மத்திய அரசு இந்த கண்டனத்தை பதிவு செய்துள்ளதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதை பாகிஸ்தான் உறுதி செய்ய வேண்டும் என்றும் இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்குவாஷ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் அனாகத் சிங் **17-**ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

---------------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் **14-**ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி மாதம் **7-**ஆம் தேதிவரை நடைபெறும் என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

இப்போட்டிகளுக்கான வீரர்கள் ஏலம் கொச்சியில் அடுத்த மாதம் **28-**ஆம் தேதி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

------------

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ பி எல் கிரிக்கெட் போட்டிகளுக்கான வீரர்கள் ஏலம் இந்தியாவில் நடைபெறும் என்று அதன் தலைவர் **Arun Dhumal** கூறியுள்ளார்.

**<<<<<<END>>>>>**